# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 504/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருண்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராஜேந்திரன் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2025.

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை தாராபுரம் ரோடு மின் நகரில் வசித்து வருகிறேன். MR அருள் முருகன் என்ற பெயரில் நிலம் மற்றம் இரு சக்கர வாகனததிற்கு கடன் வழங்கி பைனான்ஸ் செய்து வருகிறேன். எனது சொந்த ஊர் கரூர் அருகில் சின்ன தாராபுரம் ஆகும். கடந்த 10.03.2025 ம் தேதி எனது மாமனார் கரரில் உள்ள ஊரில் நடக்கும் ஆத்தூர் சோலையம்மன் கோவில் திருவிழாவிற்காக 08.03.2025 ம் தேதி 5.15 மணியளவில் நானும் எனது மனைவி மற்றும் குழந்தையுடன் சென்றோம். அப்போது கேட் மற்றும வீட்டின முன்புறம் கதவையும் பூட்டியும் சென்றோம். ஊருக்கு செல்வதற்கு முன்பாக வசூல்ஆன ரூபாய் 5,00,000/- பணம் 500 நோட்டுகளாக உள்ள பணத்தை ஹாலில் உள்ள இரும்பு டேபிள் லாக்கரில் வைத்து பூட்டிவிட்டு திருவிழாவிற்கு சென்றோம்.
2. எனது மனைவிக்கு சொந்தமான நகைகளை திருவிழாவிற்கு செல்வதால் அவர் அணிந்து வந்திருந்தார். பாப்பாவின் தங்க செயின் 6 பவுன் பெட்ரூமில் உள்ள பீரோ லாக்கரில்வைத்து பூட்டி சென்றோம். 09.3.2025 ம் தேதி மறுநாள் காலை 9.25 மணியளவல்

எனது பைனா'ன்ஸ்ஸில் வேலை செய்யஹும் தர்மராஜ் எனது வீட்டிற்கு வநத்போது வீட்டின் முன் கதவு உடைக்கப்பட்டிருந்தது. உடனே எனக்கு போன் செய்து ஏன் வீட்டை பூட்டாமல் சென்று விட்டிர்கள் என்று கேட்டார் . நான் வீட்டை பூட்டிவிட்டு தான் வந்ததேன் என்றும், கதவு உடைக்கப்பட்டிருந்தது என்று சொன்னார்.உங்கலுக்கு உடனடியாக நானும் எனது மாமனார் எனது அப்பா மூவரும் கிளம்பி 11.30 மணி அளவில் வந்தோம்.

3. நாங்கள் வந்து பார்த்தபோது முன்பக்க கதவு உடைந்து இருந்தது, வாட்ரோபில் உள்ள பீரோ உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. ஹாலில் இருந்த இரும்பு டேபிள் லாக்கர் உடைக்கப்பட்டு அங்கிருந்த கட்டிலில் எதிரி கிடந்தது. கிச்சனில் உள்ள வார்ட்ரோப்பும் திறந்து கிடந்தது ஹாலில் டேபிளில் வைத்திருந்த ரூபாய் 5 லட்சமும் பெட்ரூமில் வைத்திருந்த எனது குழந்தையின் ஆறு பவுன் தங்க செயினும் திருடு போயிருந்தது. வீட்டின் இரண்டாவது தளத்தில் மேல் மாடியில் ஸ்டீல் கதவு போட்டிருந்தோம். அதுவும் உடைக்கப்பட்டு இருந்தது. பக்கத்தில் இருந்து ஸ்டோர் ரூமில் கதவு உடைக்கப்பட்டுள்ளது, அறுபதாயிரம் ரூபாய் ஆகும் தெரியுமா. திருடு போன சொத்துக்களின் மதிப்பு ரூபாய் 5, 60,000/- ஆகும்.
என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள விவரம் தெரியும். புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் வந்து விசாரித்தார்கள். ஜூன் மாத்தம் வாக்கில் போலிசார் பணம் ரூபாய் 200000/- கிடைத்து விட்டதாகவும் தஙக செயின் 6 பவுன் கிடைத்து விட்டதாகவும், எதிரியை கைது செய்து இருப்பதாகவும் தகவல் கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்று அடையாளம காட்டினேன். பணம் ரூபாய் 5 லட்சத்தில் 3 லட்சம் ரூபாய் செலவு செய்து விட்டதாக என்று எதிரி கூறினார் என்று போலீசார் தெரிவித்தனர். பணம் ரூபாய் 2 லட்சமும் 6 பவுன் தங்க செயினையும் நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்று கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கச் செயின் எனது குழந்தையின் உடையது. தான் அந்த புகைப்படம் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் புகடைப்படத்தில் உள்ள பணம் தான் என்னுடையது தான். அ ந்த புகைப்படம் 5 எண்ணிக்ககை அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வீட்டில் திருடியதாக சொல்லியுள்ள நிலையில் யார் திருடினார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் எங்கு வைத்துஎப்போது விசாரித்தார்கள் என்றால் அன்றைய தினமே 11.30 மணிக்கு நான் ஊரில் இருந்து வந்த போது என்னை விசாரித்தார்கள். நகைகள் காணாமல் போனதகா சொல்லியுள்ள நிலையில் செயின் மாடல் பற்றி புகாரில் சொல்லவிலலை என்றால் ஆமாம் . 500 ரூபாய் நோட்டு பத்து கட்டுகள் இருந்த நிலையில் நீங்கள் வைத்திருந்த நோட்டுகள் என்றால் நான் குறியீடு செய்து வைத்திருந்தேன். எண்கள் வரிசை தெரியாது என்றால் ஆமாம் . நீங்கள் வைத்திருந்தது போல் இருந்தது என்றால் நாங்கள் 100 நோட்டுக்களை எண்ணி 100 என்று நோட்டின் மேல்புறம் எழுதி வைத்திருந்தோம்.
2. வீட்டின் கதவை உடைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் கதவின் உடைந்த பாகங்கள் மற்றும் பூட்டு கைப்பற்றினார்களா என்றால் இல்லை. காவல் துறைக்கு சென்று புகார் கொடுத்தது 4.30 மணி என்றால் வாக்குமூலம் பெற்று எழுதி கொடுக்க அந்த நேரம்ஆகிவிட்டது.உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக புகார் கொடுத்திருப்பிர்கள் என்றால் கைரேகை நிபுணர் வந்து பார்த்துவிட்டு பின் காவல் நிலையம் சென்று எழுத்து வாக்குமூலம் கொடுத்து பின் புகார் கொடுக்க 4.30 மணி ஆகிவிட்டது. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் எதிரி எந்த குற்ற சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 504/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மராஜ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | முத்துசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 13.11.2025.

**முதல் விசாரணை**

1. நான் உடுமலைப்பேட்டை அய்யலு மீனாட்சி நகரில் வசித்து வருகிறேன். அசா.1 அருண்குமாரிடம் அருள் முருகன் பைனான்ஸில் வேலை செய்து வருகிறேன். என்னுடைய வேலை பைனான்ஸ்ஸில பணம் தருபவர்களிடம் சென்று வசூல் செய்து தினமும் அசா.1 யிடம் கொடுப்பது வழக்கம். தினமும் வசூலுக்கு செல்வோம். 09.03.2025 ம் தேதி ரூபாய் 35000/- வசூலானது. கடந்த 08.03.2025 ம் தேதியன்று இரவு அருண்குமார் என்பவரின் வீட்டில் அன்றைய தினம் வசூலான பணத்தை எண்ணிக் கொடுத்தேன். பணம் ரூபாய் 5 லட்சம் இருந்தது. அந்த பணத்தை அசா.1 அருண்குமார் அவரது வீட்டின் ஹாலில இருந்த இரும்பு டேபிள் லாக்கரில் வைத்து பூடடிவிட்டார்.
2. நான் வீட்டிற்கு சென்று வி்டேன். அன்றைய தினம் அசா.1 அருண்குமார் தனது குடும்பத்துடன் அவரது மாமனார் ஊரில் உள்ள கோவில் திருவிழாவிற்காக சென்று விட்டார். மறுநாள் 09.03.2025 ம் தேதி காலை 9.25 மணிக்கு நான் சென்று பார்த்த போது அசா.1 ன் வீட்டின் கேட் அப்படியே தான் இருந்தது. நான் பூட்டை

திறப்பதற்கு சென்று போய் பார்த்த போது வீட்டின் முன் கதவ திறந்து கிடந்தது. உடனடியாக நான் அசா.1 க் போன் மூலம் தகவல் கூறினேன். அவர் உடனடியாக கிளம்பி வந்து கொண்டிருந்தார். அவர் வந்து பார்த்த போது பணம் ரூபாய் 5,00,000/− மொத்தம் 10 கட்டாக இருந்ததும் மற்றும் அவரது குழந்தையின் தங்க செயின் 6 பவுன் இருக்கும என்று கூறினார். மேற்படி பொருட்கள் திருடுபோயிருந்ததாக சொன்னார். அவர் வீட்டின் பீரோவின் துணிமணிகள் சிதறி கிடந்தது. பக்கத்து வீட்டுக்காரர் தகவல் சொன்னார். அசா.1 அருண்குமார் வரும் முன் போலிசார் வந்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. போலிசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் திருடு போன வீட்டில் 10.00 மணிக்கு விசாரித்தார்கள். நீங்கள் எதற்காக வீட்டிற்கு வந்திர்கள் என்றால் தினமும் வந்து நான் தான் பணம் வாங்கி செல்வேன். அன்றைய தினம் அவர் ஊரில் இல்லாத போது எதற்காக வீட்டிறகு சென்றிர்கள் என்றால் கைக்கு பணம் வேண்டும் என்று எடுகக வந்தேன். வீடு எந்த திசை பார்த்த வீடு என்றால் வடக்கு பார்த்த வீடு. காம்பவுண்ட் கேட் எந்த திசை பார்த்தது என்றால் அதுவும் வடக்கு பார்த்தது தான்.
2. அன்றைய தினம் அசா.1 ஊரில் இல்லை என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். போலிசார் வரும் வரை நீங்கள் தெருவில் நின்றிருந்திர்கள் என்றால் உடைக்கப்பட்ட கதவு மற்றும் கேட்டை பார்த்து கொண்டு கேட்டின் அருகில் நின்றிருந்தேன். ரூபாய் நோட்டு என்ன எண் என்று தெரியாது என்றால் சரிதான், நான் பார்த்ததில்லை. சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் காலையில் வந்து தான் பார்த்தேன. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும சம்பந்தம் இல்லை என்றாலும் புகார்வாதியான அசா.1 உங்கள் முதலாளி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.